

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சேர். பொன். இராமநாதன்
## நினைவுப் பேருரை - 2014

**சோழர் காலத்து இடையர் சமூகம்:**
**கோவில் கலாசாரத்தின் புறநிலைத் தொண்டர்கள்.**

பேருரை வழங்குநர் : பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன்
தலைவர், தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

12.11.2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரை – 2014

# சோழர் காலத்து இடையர் சமூகம் :
# கோவில் கலாசாரத்தின் புறநிலைத் தொண்டர்கள்.

பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன்
**B.A (Hons.), M.Phil. (Peradeniya),**
**PGD in Temple Art**
**(Karaikudi), Phd. (Thanjavur),**
தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

## சேர்.பொன் இராமநாதன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வருடாந்தப் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தினால் சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை நடத்தப்படுவது பாரம்பரியமான ஒரு நிகழ்வாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் திருநெல்வேலியில் நிறுவுவதற்கு அன்னாரினால் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி தளமாக அமைந்தது. இதனை நன்றியுடன் நினைவு கூரும் வகையில் இப் பல்கலைக்கழகம் வருடாவருடம் சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரையினை நடத்தி வருகிறது.

இவ் வருடம் இப் பேருரையினைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் நிகழ்த்துகிறார். அமரர் சேர்.பொன். இராமநாதனுக்கு உவப்பான பொருண்மையில் இப் பேருரை அமைவது மகிழ்ச்சியைத் தருகிறது. "சோழர் காலத்து இடையர் சமுகம் : கோவில் கலாசாரத்தின் புறநிலைத் தொண்டர்கள்" என்ற தலைப்பில் இப் பேருரை அமைகிறது. கோவில் பண்பாட்டைச் சார்ந்து பல்வேறு வகையான புறநிலைத் தொண்டர்கள் இருந்து வந்துள்ள போதும் அவர்களைப் பற்றிய முழுமையான ஆய்வுகள் பலவும் வெளிவராத சூழலில் இப் பேருரை அமைகிறது. கல்விச் சமுகம் இப் பேருரையினைச் செவிமடுத்துப் பயன்விளைக்க வேண்டும் என அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

நினைவுப் பேருரையினை ஆற்ற முன்வந்த பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனுக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

துணைவேந்தர் அவர்களே!

பீடாதிபதிகளே, துறைத்தலைவர்களே, பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே, மாணவர்களே, நண்பர்களே!

அனைவருக்கும் வணக்கம்.

உலகு உவந்து மதிக்கும் உத்தம பெரியாரான சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவாக நினைவுப்பேருரை ஆற்ற என்னை அழைத்தமைக்காக முதலில் எனது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது உரையைச் சேர். பொன். இராமநாதன் அவர்களின் பின்வரும் வாசகத்துடன் ஆரம்பிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

"இருள் நிறைந்த அறையில் அகப்பட்டு இருளை இருளென்றறியாமல் வழிகெட்டுத் தடுமாறுகின்றவனுக்கு ஓர் ஒளிக்கிரணம் சுகத்தைக் கொடுக்கும்" ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம் (1961) என்ற அவரின் நூலில் வரும் வாசகம் இது. இதனை எனது உரையின் திறவுகோலாகக் கொள்கிறேன்.

சேர் பொன். இராமநாதன் அவர்கள் தம் வாசகத்துக்கேற்பத் தம் அறிவால் ஆற்றலால் அரிய செயல் திறனால் ஈழத்துப் பண்பாட்டின் அசைவியக்கத்தில் ஒரு பிரகாசமான ஒளிக்கிரணமாகிச் சுகம் கொடுத்தவர். அவருடைய வாழ்வும்

வளமும் தேசிய நலன்மிக்கதாயும் வியாபித்துப் பெருகி சர்வதேச எல்லையைத் தொடுவதாயும் அமைந்தன. திறன் அறிந்த தேர்ச்சித் துணையாளராகி இலங்கை வாழ் மக்களின் இதயத்துக்கு நெருங்கியதான வாழ்வு அவருடையது.

காலனிய ஆட்சியில் சைவமும் தமிழும் வளர்த்த முதலி வம்சத்தில் வந்த பொன்னம்பல முதலியாரின் மகனாக 1851-04-16 அன்று தோன்றியவர் சேர். பொன். இராமநாதன்.

சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக இலங்கை அரசியல் மற்றும் பண்பாட்டு வெளியில் அதிக செல்வாக்கைச் செலுத்திய ஒரு பெரும் ஆளுமையாக விளங்கியவர் அவர். அரசியல், சைவம், தமிழ்க் கல்வி, சட்டம், நிர்வாகம் முதலாயவற்றின் செம்மையான செல்வழித்தடத்திற்குத் தம் அயராத உழைப்பை நல்கியவர். தமிழினத்திற்கு மட்டுமன்றி இந்நாட்டின் பெரும்பான்மை இனத்திற்கும் அறிவுரை நல்கி அவர்களையும் தம்பால் அன்பால் ஈர்த்த தமிழ்த்தலைவர்.

நாவலர் வளர்த்த சைவத்தமிழ் மரபு ‘நாவலர் மரபு’ எனப்படுவதாயிற்று. அதன் வழியில் தொடர்வதாயினும் சேர். பொன். இராமநாதன் மரபு வித்தியாசமானது - வேறுபட்டது. அது சைவத்துக்குள்ளேயும் தமிழுக்குள்ளேயும் மட்டும் அடங்கிவிடவில்லை. மாறாக லௌகீக வாழ்வில் தேசியம் போற்றலாகவும் ஆன்மீக வாழ்வில் சர்வதேசம் தழுவியதாகவும் அமைந்தது இராமநாதன் மரபு. லௌகீக வாழ்வில் தேசக்குடிமகனாகவும் ஆன்மீக வாழ்வில் சர்வதேசக் குடிமகனாகவும் தன்னை அடையாளங்காட்டியவர் அவர்.

ஈழத்துப் பெரியார்களுள் இவரை ‘நவயுக ஜனகர்’எனச் சிறப்புப் பெயர் கொடுத்து அழைக்கலாம். அரசியலையும் ஆன்மிகத்தையும் ஒன்றிக்கலந்து ஆட்சி செய்தவர் பண்டைய மிதிலை மன்னர் ஜனகர். காலனித்துவ ஆட்சியாளருக்கு எதிர்நிலைப்பட்ட தேசிய அரசியல் ஆளுமையாக – அந்த அரசியலில் ஆன்மிகத்தைக் கலந்தவராக விளங்கிய நவயுக ஜனகர் சேர். பொன். இராமநாதன் அவர்களே. அதனால் தான் அவரால் பல்லின பண்பாட்டைத் தழுவும் வகையிலான தீர்மானங்களை எடுக்கமுடிந்தது. செயல்திட்டங்களை நிறைவேற்ற முடிந்தது. தமிழ் மற்றும் சிங்கள மக்களின் அறிவுடைச்செயலாளராக முடிந்தது. மேலைநாட்டுக் கல்வியைப் பெற்றவராயினும் ஆங்கிலப் பண்பாட்டின் பிரதிநிதியாக வரலாற்றில் தம்மை நிலைநிறுத்தாது இலங்கைவாழ் பல்லின மக்களின் பண்பாட்டை மேனிலைப்படுத்த இலங்கைப் பண்பாட்டின் பிரதிநிதியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடிந்தது. நாட்டை உயர்த்திய உன்னதமான இலங்கையராக வரலாற்றில் வாழமுடிந்தது. சட்ட நிரூபண சபைக்கு உள்ளேயும்

வெளியேயும் தேசத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சைவத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கருத்தியல் ரீதியாகக் கீழைத்தேசப் பண்பாட்டிற்கமைவான இலங்கைப் பிரைஜையாகத் தம்மை இற்றை வரையும் நிலைநிறுத்திக்கொள்ள முடிந்தது.

மும்மொழிப் புலமை, இலக்கியம், இலக்கணம், மற்றும் சாத்திர நூற்புலமை, நாவன்மை, சட்ட நிபுணத்துவம், ஆன்மீக நோக்கு முதலாய திறன்கொண்ட இப்பெரியார் செய்த பணிகள் செப்புதற்கரியவை.பதிவு செய்த சிந்தனைகள் ஆழமானவை. உதாரணமாக காலத்துக்கேற்ற கல்விமாற்றம் பற்றி அவர் கூறும் பின்வரும் கூற்றைக் குறிப்பிடலாம் :

"கல்வி என்பது ஓர் இறுக்கமான அச்சில் வார்த்து எடுக்கப்படவேண்டிய பொருளன்று. கல்வியின் பொருளும் கல்வி முறையும் காலத்துக்குக் காலம் சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் நிலவிய கருத்துக்களும் வழக்கங்களும் அடிக்கடி மறைந்து வேறு கருத்துக்களுக்கும் வழக்கங்களுக்கும் இடமளித்துள்ளன."

இலங்கையில் பல்கலைக்கழகங்களின் உருவாக்க முன்னோடிகளுள் சேர். பொன். இராமநாதன் அவர்கள் முக்கியமானவர். இலங்கையில் பல்கலைக்கழக உருவாக்கம் தொடர்பான அவரது கூற்று ஒன்று வருமாறு

"இலங்கையில் வடபாகத்திலும் மேற்குப்பாகத்திலும் அங்கு வாழும் மக்களுடைய நன்மைகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகம் தேவைப்படும். அந்நிய கல்விமான்கள் வற்புறுத்திய விசயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படையாகக் கொள்ளாது வேறு விசயங்களையும் கல்விமுறைகளையும் அடிப்படையாகக் கொண்ட பல்கலைக்கழகங்களாக இவை தேவைப்படும். இப் பல்கலைக் கழகங்கள் எவ்வெவ்விடங்களில் அமைக்கப் படுகின்றனவோ அவ்வவ்விடங்களிலுள்ள நகரங்களின் அல்லது மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டனவாக இருக்கவேண்டும்"

தேசியப் பண்பாட்டிற்கு அமைவான பல்கலைக்கழகங்களை உருவாக்கவேண்டும் என்ற அவரது சிந்தனை போற்றுதற்குரியது. எனது உரையின் ஆரம்பத்தில் கூறிய அவரது வாசகத்துக்கொப்ப ஈழத்துக் கல்விமரபுக்குச் சுகம் கொடுக்கும் ஒரு ஒளிக்கிரணமாக அவர் பல்கலைக்கழகங்களைக் கண்டுகொண்டார்.

அரசியல், கல்வி என்ற அனைத்தும் சமயஞ்சார் ஆன்மீக அடித்தளத்தில் அமையவேண்டும் என்பது அவரின் அசைக்கமுடியாத நம்பிக்கையும் பெருவிருப்புமாய் இருந்தது. இதன் காரணமாகவே அவர் கோயில் கலாசாரத்திற்கு அதிக முதன்மை கொடுத்தார். கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் யாழ்ப்பாணம் பரமேஸ்வரர் ஆலயம், இரத்தினபுரி சிவன் கோயில் முதலிய சைவ ஆலயங்களினதும் தமிழ்நாடு கோடைக்காணல் முருகன் கோயிலினதும் உருவாக்கத்துக்கும் இயங்கு நிலைக்கும் அச்சாணியாக அமைந்த பெருமனாக விளங்கியவர் சேர். பொன். இராமநாதன். கோயில் கலாசாரத்தினூடாகவும் சமய பண்பாட்டு விழுமியங்களை நிகழ்த்தி, நிலைபெறச் செய்து, அதனூடாகச் சைவப் பாரம்பரியம் ஒன்றை இலங்கைச் சூழலில் நிலைநிறுத்த வேண்டுமென்று இடையறாது செயலாற்றிவர் அவர். கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரம் என்பது தமிழகத்தில் நிலவும் பாரம்பரியமிக்க சிவாலயங்கள் போலவே கட்டுமான அமைவிலும் நடவடிக்கைகளிலும் விளங்க வேண்டும் என்ற அசையாத விருப்புக் கொண்டு அதன்வழி செயற்பட்டவர். அத்தகைய விருப்புமிக்க செயற்பாட்டாளரின் நினைவுப் பேருரையை அவ்வாறான ஒரு மரபுசார்ந்த கோயில் - கோயிற் பண்பாடு என்ற கருத்தியலுள் அகநிலைப் பணியாளர்களாகவன்றி புறநிலைப் பணியாளர்களாக நின்று கோயிற் பண்பாட்டை நிலைநிறுத்திய இடையர் சமூகம் பற்றியதாக இந்த நினைவுப் பேருரையை நிகழ்த்த விழைகிறேன்.

இந்தப் பேருரையை நிகழ்த்துவதை வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெருங்கௌரவங்களுள் ஒன்றாகக் கருதுகிறேன். இக்கௌரவத்தை எனக்களித்த இப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரத்தினம் அவர்களுக்கும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி. பி. சிவநாதன் அவர்களுக்கும் எனது கல்விப்புலச் சகாக்களான வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம், தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் ஆகியோருக்கும்

நினைவுப் பேருரை நிதியத்தின் ஆட்சிக் குழு அங்கத்தவர்களுக்கும் இவ்வுரைசார்ந்த கருத்தாடலில் என்னுடன் உசாவிய எனது மாணவரும் சக விரிவுரையாளர்களுமான செல்லத்துரை சுதர்சன், பாஸ்கரன் சுமன் ஆகியோருக்கும் நன்றியுடையேன்.

# சோழர் காலத்தில் இடையர் சமூகம் - கோவில் கலாசாரத்தில் புறநிலைத் தொண்டர்கள்

வரலாறு என்பது, நீண்ட காலமாகவே அதிகார மையங்களான அரசு மற்றும் சமயம் சார்ந்தே எழுதப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது. உலகெங்கிலும் எழுதப்பட்டுள்ள வரலாறுகள் இவ்வாறுதான் நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. ஆனால், காலமாற்றங்கள் இவ்வாறான புனிதங்களை அல்லது மௌனங்களைக் கட்டுடைத்தன. அந்தக் கட்டுடைப்பின் வழி வரலாறுகள் என்பவை சமூகங்களின் வரலாறுகளாகவும் சனங்களின் வரலாறுகளாகவும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டன. இந்தியா மற்றும் இலங்கை முதலிய தென்கிழக்காசிய நாடுகளில் பிரித்தானிய ஏகாபத்தியம் நிலைகொண்டபோது ஆரம்ப நிலையில்தான் வரலாறுகள் எழுதப்பட்டன. ஆனாலும் அவை அகழாய்வுகள், கல்வெட்டாய்வுகள், மொழியியல் ஆய்வுகள், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் என்ற பல்வேறு தளங்களில் இந்தியவியலாளர்களால் (Indologist) நிகத்த்தப்பட்ட போது அவை பன்முகங்கொண்டன. அவ்வாறான ஆய்வுகளில் ஊன்றிய நலன்களும் உள்நோக்கங்களும் (சிந்துவெளி நாகரிகத்தின் விவரணம், இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்ப ஆய்வுகள்) இருந்த போதும் எதிரிடையாக இந்திய சமூக வரலாறுகளையும் அவை புதுப்பித்தன.

பின்காலனிய சூழலில் வரலற்றுத் தேடல்கள் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. அதிகார மையங்களால் கட்டமைக்கப்பட்ட வரலாறுகள் வெறுமனே மேற்கட்டுமானக் கருத்தியல்களை மாத்திரம் பிரதிபலித்தன. அவை உண்மையான சனங்களின் வரலாறுகளைப் பதிவுசெய்வதில்லை என்ற எதிர்வினைகள் நிகழ்த்தப்பட்டன. இந்த எதிர்வினையின் விளைவாக நாட்டுப்புறவியல் ஆய்வுகள், பழங்குடியினர் பற்றிய ஆய்வுகள், இலக்கியங்கள் வழியாக விளிம்புநிலை மக்கள் பற்றிய தேடல்கள், கல்வெட்டுக்கள் வாயிலாகப் பெறப்பட்ட பிரமாண்டங்களை விடுத்து அடிநிலை மக்கள் பற்றிய தேடல்கள், குலங்கள், குடிகள் பற்றிய தேடல்கள் பலவாறு இந்திய உபகண்டச் சூழலில் நிகழ்ந்தேறின. அதன் தொடர்விளைவாக தமிழ்ச் சூழலிலும் இவ்வாறான தேடல்கள் தொடங்கின. காலனிய சூழலில் மேனாட்டவரால்

அறிமுகப்படுத்தப்பட்ட ஆய்வுநெறிமுறைகளுக்கு இயைபாகவே மேற்குறித்த தேடல்கள் தமிழ்ச் சூழலிலும் நிகழத் தொடங்கின.

மேனாட்டவர் அளித்த பயிற்சியினால் சமூக வரலாற்றுத் தேடல்கள் நிகழ்த்தப்பட்ட போது அதனூடாகப் பேராசிரியர்கள் கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, ரி.வி. சதாசிவ பண்டாரத்தார், கே.கே. பிள்ளை, ரி.வி.மகாலிங்கம், சி.மீனாட்சி முதலியோர் தமிழ்நாட்டு வரலாறு மற்றும் பண்பாடு மற்றும் சமூக வரலாற்று ஆய்வாளர்களாக மேற்கிளம்பினர். இதுபோலவே தமிழ் இலக்கியப் பதிப்பு வழியும் வி.கனகசபைப்பிள்ளை, கே.சிவராசபிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை, மயிலை சீனி. வேங்கடசாமி ஆகியோர் சமூக வரலாற்று ஆய்வாளர்களாக மேற்கிளம்பினர். இவர்கள் மரபுவழிப்பட்ட ஆய்வுகளை நிகழ்த்தியமைக்குப் புறம்பாக ஆங்காங்கே சமூக வரலாற்றுக் குறிப்புகளையும் நிகழ்த்திச் சென்றனர். இதனால் புதையுண்ட உண்மை வரலாறுகள் ஆங்காங்கே மேற்கிளம்பத் தொடங்கின.

தமிழக சமூக வரலாற்றில் கோவில்களுக்கு மிக முக்கியமான இடமுண்டு. அவை அரசுகளின் அதிகார வழியும், பக்தி இயக்கத்தின் செயற்பாடுகள் வழியும் கட்டமைக்கப்பட்டன. அவை சமயங்களின் பிரமாண்டங்கள் என்ற கருத்தியலையே முதலில் நிலைநிறுத்தின. அதாவது, அவை சடங்காசாரத்தின் நிலைக்களங்கள் என்ற தளத்திலேயே நீண்ட காலமாக நிகழ்த்தன. ஆனால், அவை அந்தத் தளத்துக்கும் அப்பால் சமூக நிறுவனங்களாக (Social Institution) இயங்கியமையை மேற்குறித்த ஆய்வாளர்கள் விபரிக்கத் தொடங்கினார்கள். இவர்களுள் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி முதன்மையானவராகக் கருதப்படுகின்றார். அவர் தமது ‘சோழர்கள்’ என்ற நூலில் ஆலயங்களின் நிறுவனத் தன்மை குறித்து மிகவும் விஸ்தாரமாக ஆய்வு செய்துள்ளார். இதற்கு முன்பே சி.மீனாட்சி பல்லவர் காலத்து சமூக வாழ்வை கோவில்களுடன் தொடர்புபடுத்தி விரிவான ஆய்வொன்றை நிகழ்த்தியுள்ளார். பின்னாட்களில் ரி.வி.மகாலிங்கமும் விஜயநகர காலத்துச் சமூக வாழ்வை கோவில்களை முன்நிறுத்தி ஆராய்ந்துள்ளார். அவ்வாய்வுகள் மிதப்புக் கொள்கை உடையனவாகவும் பொதுப்புத்தி சார்ந்தனாவாகவும் அமைந்தன என்று பின்னாட்களில்

அவை பற்றி ஆய்வு செய்த மேலைத்தைய அறிஞர்களான Burton Stein, karashima Noboru, Kenneth R. Hall, Georrge W Spencer, Lsslie C Orr ஆகிய மேனாட்டறிஞர்களும் பேராசிரியர் சுப்பராயலு, சுரேஸ்.பி.பிள்ளை, நா.வானமாமலை, செம்பகலட்சுமி முதலான கீழைத்தேயர்களும் நிகழ்த்திய நுண்ணாய்வுகளின் வழியாக புதிய செய்திகளை - புதிய வரலாறுகளை அறிய முடிந்தது. புதையுண்ட வரலாறுகள் மீட்டுருவாக்கம் பெற்றன. அடிமைகள், அடிநிலைக் கலைஞர்கள், பெண்கள், அடிநிலை மக்கள் என இதனால் பலர் விளக்கம் பெறத் தொடங்கினர். சமூக வரலாறு சனங்களின் வரலாறாக புதுப்பரிமாணம் பெறத் தொடங்கியது.

இந்த வழித்தடத்தில் நின்றுகொண்டு கோவில் என்கிற பெருநிறுவனத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இடையர்கள் என்கிற இனக்குழுமம் எவ்வாறான தொடர்புகளைக் கோவிலுடன் கொண்டிருந்தன என்பதையும் அதற்குப் புறம்பாக அவர்களுடைய வாழ்வியற் கோலங்களையும் வெளிக்கொணர்வது இந்தப் பேருரையின் ஆதார சுருதியாக அமைகிறது.

சோழர்காலக் கோவில்களை மூன்று வகையாக இனங்காணலாம். ஒன்று : பாடல் பெற்ற தலங்கள். இரண்டாவது : பள்ளிப்படைக் கோவில்கள். மூன்றாவது : அரசுக் கோவில்கள் (Royal Temple). இவையாவும் ஏதோவொரு வகையில் அரசுகளையும் பொதுமக்களையும் இணைத்தன. இவற்றிற்கு இடையே சடங்குகளை நிகழ்த்துவோராக பிராமணர்கள் நிலைத்தனர். எனவே, இவை மூன்றையும் சடங்காசாரங்கள் சார்ந்த கோவில் முறைமை எனக் குறிப்பிடலாம். எனினும், அந்தத் தளத்தைத் தாண்டி அவை சமூக நிறுவனங்களாக நிலைத்தவாற்றை அவற்றினுடைய செயற்பாடுகளின் வழி அறியமுடியும். அவை பெரும்சொத்துடைமை நிறுவனங்களாக இயங்கின. மக்களின் அன்றாடத் தேவைகளின் சேவை மையமாக விளங்கின. கலை, பண்பாடு ஆகியவற்றைப் பேணுகின்ற மையங்களாகவும் விளங்கின. இவை பற்றிய விஸ்தாரமான ஆய்வுகளை கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி நிகழ்த்தியுள்ளார்.

கோவில்கள் என்பவை சோழ அதிகாரக் கட்டமைப்பில் கிராமங்களில் இருந்தே உருவாக்கப்படுகின்றன. கிராமங்களில் குடும்பு என்ற அடிநிலை சமூக அமைப்புக்குச் சிறிது மேலான நிறுவன மையமாக கோவில்கள் விளங்கின. கோவில்களில் திட்டமிடும் அலுவலர்கள் (Staff Services), அணிநிரல் பணியாளர் (Line Services), அனுசரணைப் பணியாளர் (Auxiliary Services) என்று மூன்று வகையில் சேவையாளர் செயற்பட்டதைக் கல்வெட்டுக்கள் வழி அறிய முடிகிறது. மூலப்பரிசை, உள்நாழிகைப் பிராமணர் மற்றும் ஸ்ரீகாரியம் செய்கின்ற கண்காணி, அடப்ப முதலிகள், சபை (பிராமணர்), ஊர் (வேளாளர்), நகரம் (வணிகர்கள்) என்ற ஜாதியவழி அமைப்புக்களின் வழிவந்த அலுவலர்கள். மேலும், சிறுகோவில்களில் காணப்பட்ட சாத்த காணம், காணிக் காணம், கிருஸ்ண காணம் என்ற மூலவர் வழி அழைக்கப்பெற்ற அறங்காவலர் குழுக்கள் திட்டமிடும் பணியாளர்களாக நிலைத்தனர். அணிநிரல் பணியாளர்களாக பதிபாதமூலம், பட்டுடை, பஞ்சாச்சாரியர்கள், அர்ச்சகர்கள், பட்டர்கள் எனப்படுவோர் சேவையாற்றினர். திருப்பதிகம் பாடுவோர், தச்சர், உவச்சன் (மேளகாரர்), தேவரடியார், காவற்காரர், கணக்காயர், மாலை தொடுப்போர், ஆடை நெய்வோர், உலோக வேலை போன்ற தொழில்கள் செய்கின்ற கைவினைக் கலைஞர்கள் ஆகியோர் அனுசரணைப் பணியாளர்கள் என்ற வகுப்புக்குள் அடங்குகின்றனர். (பாலசுப்ரமணியம், மா. : 1979 : பக்.56.) மேற்குறித்த பாகுபாட்டின் அடிப் படையில் நோக்குகின்றபோது இவர்கள் அனைவரும் அகச் சேவை யாளர்கள் (internal Functionaries) எனலாம். அதாவது கோவில் நிர்வாகம், சடங்குகள், உப சேவைகள் மற்றும் தானங்களை ஏற்றலும் பராமரித்தலும் முதலான செயற்பாடுகளை செய்பவர்களாக காணப் படுகிறார்கள். ஆயின், இவற்றுக்குப் புறம்பாக இந்த மேற்படி சேவைகளில் தொடர்புபடாத ஆனால் கோவிலுக்கு வழங்கப்பட்ட தான மொன்றை காலங்காலமாக பேணி, அதற்குப் பதிலாக கோவிலுக்கு நெய் வழங்கி, அதனூடாக விளக்கெரித்தல் என்ற செயற்பாட்டை இடையர் சமூகம் நிகழ்த்தியது. எனவே, கோவிலுக்கு புறம்பாக நின்றுகொண்டு கோவில் தொண்டை நிறைவேற்றியவர்களை புறநிலைத் தொண்டர்கள் (Out Side Devoties) அல்லது வெளிவாரி சேவையாளர்கள் (External Functionaris) எனக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமுடையது.

கோயில்களில் விளக்கு எரிப்பதற்குப் பலவகையான விளக்குகள் தானமாக அளிக்கப்பட்டன. கல்வெட்டுக்களில் நந்தா விளக்கு, சந்தி விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு போன்ற விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. நந்தா விளக்கு என்பது இறைவன் அருகில் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும். சந்தி விளக்கு என்பது காலை, மாலை இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும். விளக்குகள் வெள்ளியாலும் செம்பாலும் செய்து கொடுக்கப்பட்டு, அவற்றின் எடை எவ்வளவு என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இராசராசனின் தேவியான உலகமாதேவி திருவையாறு கோயிலுக்கு ஈழச்சியல் விளக்கு, மலையான்சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, ஓர்க்குட விளக்கு, அனந்தலை விளக்கு அகியவற்றை அளித்தாள் என அக்கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இவை அனைத்தும் செம்பினால் செய்யப் பட்டவை. மலையான்சியல், ஈழச்சியல் போன்ற விளக்குகள் இராசராசன் பெற்ற வெற்றிகளால் சோழநாட்டிற்கு வழக்கத்திற்கு வந்திருக்கலாம். மேலும், முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு 'ஐந்து நிலைக் குத்துவிளக்கு' 'மூன்று நிலைக் குத்து விளக்கு' ஆகியவை கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப் படுகின்றது. திருமணஞ்சேரிக் கோயிலுக்கு 'தொங்கும் விளக்கு' ஒன்று அளிக்கப்பட்டது. திருச்சாற்றூரைக் கோயிலுக்கு செம்பினால் ஆன முப்பத்திரண்டு அகல் விளக்குகள் அளிக்கப்பட்டன. முதலாம் இராசராசன் காலத்தில் ஶ்ரீவிசய மன்னனின் பிரதிநிதியாகிய நிமிலன் அகத்தீசுவரன் நாகைக்காயாரோகண சுவாமி கோயிலுக்கு 'பாவை விளக்கு' 'குரக்கு விளக்கு', 'மத்த விளக்கு' போன்றவற்றைத் தானமாக அளிக்க இரண் சடையன் என்ற தேவர்கண்ட ஆசாரியன் இவற்றை வடிவமைத்தான் என அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது. (நடன காசிநாதன் (ப.ஆ) : 1988 : பக். 225 - 226).

கோவில்களில் விளக்கெரிப்பது என்பது மிகவும் முக்கியமான தொண்டாகக் கருதப்பட்டது. கோவில்களில் காணப்படும் அதிகமான கல்வெட்டுக்கள் கோவிலில் விளக்கெரிக்க நிலம், காசு, பொன் என்பவற்றைத் தானமாக வழங்கிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. நிலங்களில் இருந்து பெற்ற வரிகளின் மூலமாகவும் காசுகள், பொன் முதலானவற்றில் பெற்ற பலிசை (வட்டி) முதலாவற்றினாலும் நெய்பெற்று

விளக்குகள் எரிக்கப்பட்டன. தானங்களை வழங்குவோர், தானங்களைப் பொறுப்பேற்போர், தானங்களைப் பராமரிப்போர் என்ற மூன்று வகையாக இது நிகழ்ந்திருக்கிறது. இதற்கு மேலாக விளக்கெரிப்பதற்கு கால்நடைகளைத் தானமாக வழங்குகிற ஒரு முறையும் காணப்பட்டது. காசு, பொன், நிலம் ஆகியவற்றை வழங்க முடியாதவர்கள் எருமைகள், பசுக்கள், ஆடுகள் ஆகியவற்றை விளக்கெரிப்பதற்காகத் தானமாக வழங்கியுள்ளனர்.

விளக்கெரிப்பதற்கு பசுநெய், தேங்காய் எண்ணெய், இலுப்பெண்ணெய் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும், பசுநெய்யே அளவுக்கதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. இதற்காக கோவில்களில் 'சுரபிச் சாலைகள்' என்ற கால்நடைக் கூடங்கள் இருந்தன. ஆயினும், தேவைகள் அதிகரிக்க, அதற்கேற்ப சுரபிச் சாலைகள் பசுநெய்யை தயாரித்தல் கடினமானபோது அதைப்பெற்றுக் கொள்வதற்கான மாற்று ஏற்பாடாகவே இடையர்களின் உதவியை நாடியிருத்தல் வேண்டும். இவ்வாறான ஏற்பாடுகள் எப்போது ஏற்பட்டது என வரையறை செய்ய முடியாத போதும், கி.பி ஏழாம் நூற்றண்டுக் கல்வெட்டுக்களில் இவர்களது சேவைகள் தொடர்பிலான ஆதாரங்கள் எமக்குக் கிடைக்கின்றன. (ரோஸ்லின் ரொபெக்காள் : 2000)

கோவில்களில் விளக்கெரிப்பதற்குக் கால்நடைகளே அதிகமாக வழங்கப்பட்டமையை இன்னொரு வகையாகவும் கட்டமைக்கலாம். தஞ்சாவூர் மாவட்டத்தின் செழிப்பு, அதனால் ஏற்பட்ட விவசாய உற்பத்தி முறைகள், விவசாயத்துக்குத் தேவையான கால்நடைகளின் உபயோகமும், புதிய மேய்ச்சல் நிலங்களின் விரிவாக்கமும் நிகழ்ந்தபோது கால்நடைகளின் தொகையும் அதிகரித்தன. மக்கள் தமது வேண்டுதலுக்காக பொன், காசு என்பவற்றை விட கால்நடைகளையே கொடையாக வழங்கிருக்க வேண்டும். இது ஒரு வகையான பண்டமாற்று முறையாக இருந்திருக்கக் கூடும். மேலும், போரில் வெற்றிகொண்ட போது கைப்பற்றப்பட்ட கால்நடைகளும் கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட செய்திகளை அறிய முடிகிறது. சின்னக் காஞ்சிபுரம் பிடாரி கோவில் கல்வெட்டு ஒன்று முதலாம் இராஜராஜன் காலத்தில் குளகாடிக் கிழான் பரமன் மழபாடியான மும்முடிச்சோழன் என்பவன் சிப்புலி நாடும், பாக்கை நாடும் வெற்றி கொண்டு கைப்பற்றிய ஆடுகள் தொள்ளாயிரம்.

இவற்றை சோழ அதிகாரி ஒருவன் இராசராசன் என்னும் பெயரில் பத்து விளக்குகள் எரிக்கத் தானமாக கோவிலுக்கு வழங்கினான் என்ற செய்தியையும் குறிப்பிடுகிறது (தெ.இ.க. தொகுதி XIII, இல. 141).

தஞ்சாவூர் பெரிய கோவில் கல்வெட்டுக்கள் கோவிலுக்கு பல்வேறு வகையாகக் கால்நடைகள் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றன.

"பெருந்தரத்து உத்தரங்குடையான் கோழிப்போரில் ஊத்தை அட்டாது வைத்த ஆடு அறுபத்தொன்பது, காசு ஒன்பது, இவற்றிற்கு ஒரு விளக்கு"

"உடையார் ராஜராஜர் பண்டாரத்துக்கு கொடுத்த காசு ஆறு, உடையார் சுரபிக்குக் கொடுத்த பசு ஒன்பது"

இலாடமாதேவியார் மாடாய் இவர் எழுந்தருளிவித்த பாசுபத மூர்த்திக்கு தந்த பசு பதினாறு"

(தெ.இ.க. தொகுதி II பகுதி III, இல. 94)

மேற்குறித்த கல்வெட்டுச் செய்தியின் ஊடாக பல்வேறு நோக்கங்களுக்காக கால்நடைகள் கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்டன என்பதும் 'சுரபி' என்ற மாட்டுத் தொழுவத்தில் அவை கோவிலாரால் பராமரிக்கப்பட்டன என்ற செய்தியையும் அறிய முடிகிறது. அரசர், அரசமாதேவியர், பெருந்தரம் பணியாளர், சேனாதிபதிகள், அதிகாரிகளின் மனைவிமார், பரிவாரத்தார், வேளத்துப் பெண்கள், வியாபாரிகள், திருமந்திர ஓலை, சமயத் துறவிகள் (ஈசான பண்டிதர்) எனப் பலர் விளக்கெரிப்பதற்காக காசுகள் வழங்கினர். அவற்றுக்கு கால்நடைகள் கொள்முதல் செய்யப்பட்டன. அதுபோலவே பசு, எருமை, ஆடு என்பனவையும் வழங்கப்பட்டன. தஞ்சாவூர் கோவிலில் உள்ள இராசராசனது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றின் (தெ.இ.க.தொ. II, பகுதி III, IV, V, இல. 95.) தகவல்களின்படி கோயில் சுரபியில் சுமார் 6578 கால்நடைகள் தானமாக வழங்கப்பட்ட செய்தியை அறிய முடிகின்றது. ஆகவே, கோவில்களின் பெருக்கமும் தானங்களின்

பெருக்கமும் அதிகரித்த போது கோவில்களால் கால்நடைகளைப் பராமரிக்க இயலவில்லை. எனவே, அவற்றை இடையர் சமூகத்திடம் கையளித்து, அவர்களிடமிருந்து சேவையாக நெய் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இவ்விடத்தில் இடையர் சமூகம் பற்றிய முற்குறிப்பு ஒன்றை எழுதுவது அவசியமாகிறது. பொதுவான மானிட வளர்ச்சியில் இச் சமூகம் பற்றிய நிலைப்பாடுகளை அறிந்து கொள்வது அவசியமானதாகும். இனக்குழு மக்கள் வாழ்க்கையில் பழைய கற்காலத்தில் உணவு சேகரித்தல், வேட்டை ஆடுதல் ஆகிய தொழில்களிலும் புதிய கற்காலத்தில் புராதன விவசாயமும் கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களும், உலோகக் காலத்தில் ஏரால் பயிர் செய்யும் தொழிலும் பிற தொழில்களும் முக்கியத்துவம் பெற்றன.

புதிய கற்காலத்தில் கற்களை விரும்பிய வடிவில் அமைத்துக் கொண்டனர். பானை செய்ய அறிந்தனர். தாழிகள் தானியச் சேர்களாகப் பயன்பட்டதோடு மரணச் சடங்குகளிலும் முக்கியத்துவமடைந்தன. கால்நடை வளர்ப்பும் புராதான விவசாயமும் தோன்றின. உணவு சேகரிப்போர் பகுதி உற்பத்தியாளர்களாக மாறினர். விலங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் வரை விவசாயமும் கால்நடை வளர்ப்பும் இணைந்து சென்றன. இனக்குழுவின் வளர்ச்சி காரணமாக ஒவ்வொரு விவசாயக் கால்நடை வளர்ப்புக் குழுவும் இரண்டாகப் பிரிந்து சென்றன. சில வேட்டைக் குழுவினர் கால்நடை வளர்ப்பையோ விவசாயத்தையோ துணையாகக் கொண்டனர் என மனிதகுல வரலாற்றில் கால்நடை வளர்ப்புப் பிரிந்து வளர்ச்சியடைந்ததைக் கா.சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். (சுப்பிரமணியன், கா. : 1993: சென்னை : ப.16.)

இந்திய வரலாற்றிலும் தொல் பழங்காலத்திலேயே கால்நடை வளர்ப்பும் அதனடியாகப் பிறந்த சம்பிரதாயங்களும் நிலைபெற்றிருந்தன. “தக்கணத்தில், பிக்கிலிக்கால், உட்னூர், சங்கனக்கல் ஆகிய ஊர்களில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த மாட்டுப் பட்டிகளின் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அங்கு பட்டி அமைக்கப்பட்டிருந்த விதம், பட்டிகளில் தங்கியிருந்த கால் நடைகளின் குளம்புப் பதிவு போன்றவை புதைந்திருந்தமை அறியப்பட்டுள்ளது.

கால்நடை மேய்ப்பர்கள் மலைக் குகைகளில் தங்கியிருந்தனர். பிறகு மலையோரங்களில் மண்சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்து வாழத் தலைப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த பகுதி கால்நடை வளர்ப்புக்கு உகந்த காடடர்ந்த (முல்லை) பகுதியாகும். பட்டிகளும் வாழ்விடங்களுக்கும் அருகில் நீர் நிலைகள் இருந்தன. கால்நடைகளை மேய்ப்பதற்கென அவர்கள் காடுகளில் தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் ஆநிரை, செம்மறியாடு, வெள்ளாடு என்பனவற்றை வளர்த்துள்ளனர் (பூங்குன்றன், இரா. : 2001: ப.31)

இருக்கு வேதம் கால்நடை வளர்ப்புப் பற்றிய பல செய்திகளைத் தருகின்றது. கால்நடை வளர்ப்போர் கோபாலன் என்று குறிப்பிடப்பட்டனர். மந்தை வளர்ப்பு இக் காலத்தில் செல்வத்தின் ஒரு பகுதியாக விளங்கியது. கால்நடைகள் கோஷ்டா (goshtha) என்ற இடத்தில் அடைக்கப்பட்டன. மகாபாரதமும் பாகவத புராணமும் இவர்களை 'யாதவர்' என குறிப்பிடுகின்றன. இவர்கள் யமுனை ஆற்றங்கரையில் பிருந்தாவனத்திலும் கோகுலத்திலும் வசித்தனர். ஆபிரர் (Abhiras) எனப்படும் இன்னனொரு குழுமம் சரஸ்வதி ஆற்றங்கரையில் வசித்ததாக மாகாபாரதம் குறிப்பிடுகின்றது. உபநிடதம், பிராமணங்கள் முதலியவற்றிலும் கால்நடைகளையும், அவற்றை வளர்ப்போர் பற்றிய செய்திகளையும் அறிய முடிகின்றது (Vairavel, N : 1989 : p.11)

தமிழகத்திலும் தொல் பழங்காலத்திலிருந்தே இடையர் குழுமம் வாழ்ந்து வந்துள்ளது. தக்கணத்தில் வாழ்ந்த கால்நடை மேய்ப்பர்கள் புதிய கற்காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் ஈரான் பகுதியில் இருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் என்றும் கருதுகின்றனர். ஆனால் பென்காடு, லெவின் போன்றவர்கள் அவர்கள் தென்னிந்தியக் குடிகளே என்று கூறுகின்றனர். இக்கூற்றே சரியானது. தக்கணத்தில் வாழ்ந்த கால்நடை மேய்ப்பவர்கள் தொண்டை மண்டலத்திலும் வாழ்ந்தனர். தொண்டை மண்டலத்தில் 'பையம்பள்ளி' என்ற ஊரில் நடைபெற்ற அகழ்வில் இருந்து கிடைக்கும் சான்றுகள் புதிய கற்காலத்தில் முடிவினையும் பெருங்கற்காலத்தின் தொடக்கத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றன. அங்கு புதிய கற்காலக் கருவிகள், கால்நடைகளின் உருவங்கள், கேழ்வரகு, பயறுவகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மக்கள்

தாங்கள் வாழ்வதற்கு வீடுகளையும் கட்டியிருந்தனர். அவர்கள் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டபோது கால்நடை வளர்ப்பும், கொல்லை வேளாண்மையும் சிறப்படைந்தன (பூங்குன்றன், இரா. : 2001: ப.32)

தமிழகத்தில் ஆயர் வாழ்வியலைச் சித்திரிக்கும் முதல் நிலைக்கு ஆதாரமாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. அதனைத் தொடர்ந்த காலங்களில் ஆயர் வாழ்க்கை தொடர்பான சித்திரிப்புகள் பல்வேறு பரிமாணங்களில் இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் தமிழர் சமூகத்தில் நீண்டகால வரலாற்று எச்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன எனலாம்.

வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையையும், ஆடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனிச் சொத்துடைமையும் அரசும் தோன்றிய வரலாற்றுக் காலம் எனவும் தொன்மைச் சமுதாயம் அழிந்து நிலவுடைமை அமைப்புத் தோன்றிய காலம் ஒருபுறம், தனிச் சொத்துடமையை அடிப்படையாகக் கொண்ட வர்க்க சமுதாயம் மற்றொருபுறம் என ஏக காலத்தில் நிலவின. ஒன்று அழிந்து வந்தது; மற்றொன்று வளர்ந்து வந்தது. என நா.வானமாமலை கூறும் சமூகச் சூழலைச் சிறப்பாக சங்கப் பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன (பார்க்க : மாதையன் பெ. : 2001 : ப.259) ஆகவே, சங்கப் பாடல்களில் ஆயர் பற்றிய சித்தரிப்புக்களின் ஊடாக இனக் குழுமச் சமூகத்தின் எச்சங்கள் பலவற்றை அறிய வழிசெய்கின்றது எனலாம்.

சங்க இலக்கியங்கள் சுட்டும் நிலவியல் அடிப்படையிலான பிரிவில் முல்லை நில மக்களே மேற்குறித்த இனக்குழும கால்நடை மேய்க்கும் மக்களாகச் சுட்டப்படுகின்றனர். அடர்ந்த காட்டுப் பகுதியையும் பரந்த புல்வெளியையும் கொண்ட இப் பிரதேசம் கால்நடை வளர்ப்பிற்கு உகந்ததாக விளங்கியது. எனவே, வேட்டைச் சமூகமாக இருந்த இனக்குழு மக்கள் கால்நடை வளர்ப்புக் குழுவாக மாறுவதற்கு முல்லைநில இயற்கையே காரணமாக இருந்திருக்க வேண்டும். இப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களை அண்டர் (குறுந்தொகை : 117), ஆயர் (புறம் : 390), இடையர் (புறம் : 54, பெரும்பாணாற்றுப்படை அடி : 175),

கோவலர் (நெடுநல்வாடை : அடி 03, அகநானூறு : 14), தொழுவர் (மலைபடுகடாம் 290), பொதுவர் (கலித்தொகை : 105) எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்களுள் ஆயரும், அண்டரும், கோவலரும், ஆநிரை மேய்ப்பவர்கள், இடையர் மந்தை மேய்ப்போர், தொழுவர் கால்நடைத் தொழுவங்கள் (பட்டி) உடையோர். அவர்கள் பொதுவாக மேய்ப்பர்களாகவும் விளங்கினர் (Vairavel, N : 1989 : p.27)

சிலப்பதிகாரத்தில் இவர்கள் குறித்த செய்திகள் சமயச் சார்புடன் காணப்படுகின்றன. ஆயர் (சிலம்பு : 15 : 117) கோவலர் (சிலம்பு 15 : 121) இடையர்குலம் (சிலம்பு 15: 130) என்று இவர்கள் சுட்டப்படுகின்றனர். 'ஆச்சியர் குரவை' என்ற பகுதியில் இவர்களது சமயச் சார்பு தொடர்பான நிகழ்ச்சிகளே பெரிதும் சித்திரிக்கப்படுகின்றன. இனக்குழும வழிபாட்டு முறைகளின் எச்சங்கள் பிற்காலத்தில் பல்வேறு விதமான தொன்மங்களுடன் இணைந்து வளர்ச்சி பெற்றமைக்கு ஆச்சியர் குரவை சிறந்த உதாரணமாக விளங்குகின்றது.

சிலப்பதிகாரத்தின் பின் உருவான பக்தி இலக்கியங்களான வைணவ ஆழ்வார்களது பாசுரங்களில் இடையர் பற்றிய சித்திரிப்புக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளதெனலாம். மகாவிஷ்ணுவின் அவதாரங்கள் பற்றிய தொன்மங்கள் பலவும் தமிழகத்தில் அறியப்பட்டிருந்தனவெனினும் கண்ணன், இராமன் அவதாரங்கள் பற்றிய தொன்மங்கள் கிராமிய மக்கள் முதல் பேரிலக்கியகாரர் வரை பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தன. அவற்றுள்ளும் வைணவ ஆழ்வார்களைக் கண்ணன் பற்றிய தொன்மமே மிகவும் கவர்ந்தது. இதனடிப்படையில் ஆயர் பாடியில் வளர்ந்த கண்ணன் கதைகளை அவர்கள் பாசுரங்களில் பாடிய போது, ஆயர்பாடி, ஆயர் தொடர்பான பல சேதிகளும் தவிர்க்க முடியாதவாறு இடம்பெற்றன. குறிப்பாக பெரியாழ்வாரது பெரிய திருமொழியிலும், ஆண்டாளது நாச்சியார் திருமொமியிலும் இச் செய்திகளை அதிகமாகக் காணலாம். ஆயர்பாடி (திருப்பாவை : 01), ஆய்ப்பாடி (திருமங்கை யாழ்வார் திருமொழி : 11: 05: 02), என அவர்கள் வாழிடமும். ஆயர் குலம் (திருப்பாவை : 05), கோவலர் (திருப்பாவை : 11), முதலான அவர்கள் பெயர்களும், ஆநிரை மேய்த்தல் (நாச்சியார் திருமொழி : 29), ஆநிரை காத்தல் (திருமங்கையாழ்வார் : 10: 09 – 02), குழலூதல்

(திருமங்கையாழ்வார் : 06: 06: 07), குரவையாடல் (திருமங்கையாழ்வார் : 01:08:04, நம்மாழ்வார் 06:04:01) முதலிய நிகழ்ச்சிகளும் ஆழ்வார் பாசுரங்களில் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

பக்தி இலக்கிய காலத்திலேயே இடையர் பற்றிய செய்திகள் கல்வெட்டுக்களிலும் இடம்பெறத் தொடங்கிவிட்டன. பண்டைய வழிபாட்டு முறைகளின் காலமுறை வளர்ச்சியினாலும் பக்தி இலக்கியச் செயற்பாடுகளினாலும் தமிழகமெங்கும் கோயில்கள் பல எழுந்தன. கோயில்களில் பூசைகளும் விழாக்களும் நடைபெற்றன. கோயில்களின் அன்றாட, வருடாந்த செயற்பாடுகளுக்கான கொடைகள் அதிகரித்தன. விளக்குத் தானங்களுக்குக் கால்நடைகள் தரப்பட்டபோது அவற்றைப் பராமரிக்கவும், விளக்கெரிப்பதற்கான நெய் உற்பத்திக்கும் இடையர்களது தேவை அவசியமாகியது. எனவே, தவிர்க்க முடியாத வகையில் கோயிற்கொடைகள் குறித்த கல்வெட்டுக்களில் இடையர் இடம்பெறத் தொடங்கினர். இவர்கள் இடையர் (தெ.இ.க.தொ.II,இல.94), மன்றாடி (தெ.இ.க.தொ.XIX,இல.110), படைத்தலைவன் (தெ.இ.க.தொ.V, இல.451), யாதவர் (தெ.இ.க.தொ.VIII,இல.488), ஸ்ரீகோபாலன் (தெ.இ.க.தொ. XXIV, இல.136), கோன் (தெ.இ.க.தொ.VII, இல.84) என்றெல்லாம் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

இவ்வாறான ஒரு தொடர் வளர்ச்சியின் பின்னணியிலேதான் சோழர்களுடைய கல்வெட்டுக்கள் கூறும் இடையர் சமூகம் பற்றிய கருத்தாடல்களை நிகழ்த்தவேண்டியுள்ளது. தஞ்சாவூர் கோவிலில் காணப்படும் இராஜராஜன் காலத்துக் கல்வெட்டுகளில் ஒன்று இடையர்களுக்கு வழங்கப்பட்ட கால்நடைகளின் அளவையும் அது இடையர்களிடம் கையளிக்கப்பட்ட செய்தியையும் தெரிவிக்கின்றது :

"உடையார் ஸ்ரீ இராஜராஜீஸ்வரம் உடையார்க்கு உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த கால்மாட்டிலுங் குடுத்தார் குடுத்த கால்மாட்டிலுங் காசு குடுத்து முதலான கால் மாட்டிலுங் திருவிளக்கு நெய் அளக்கக் கடவர்களாக இடையர் வழி திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடு தொண்ணூற்றாறாகவும் பசு நாற்பத்தெட்டாகவும் எருமை பதினாறாகவும் இவையிற்றுக்கு பசுவின் கன்றும் எருதும் பசுசார்த்திக் குடுத்தன

பசுவாகவும், ஆட்டுக்குட்டியுங் கிடாயும் ஆடு சார்த்திக் குடுத்த ஆடாகவும் எருமைக் கன்றுங் கிடாயும் எருமை சார்த்திக் குடுத்தன எருமையாகவும் மாடடுத்து 'மாடு கொண்ட இடையரும் இவர்கள் உறவுமுறையாய் அடைகுடிகளானாரும் இவர்கள் அடைகுடிகளுந் திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடவல்லானால் நிசதம் நெய் உழக்காகத் தாங்களும் தங்கள் வம்சத்தாரும் சந்திராதித்தவரை உடையார் பண்டாரத்தே நெய் அளக்கக் கடவர்களாக (தெ.இ.க. தொகுதி II பகுதி III, IV, V இல.63)

மேற்குறித்த கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது பின்வரும் வியாக்கியானங்களை முன்வைக்கலாம்:

- கால்நடைகள் இடையரிடம் ஒப்படைக்கப்பட்டன
- ஒரு விளக்கு எரிக்க தொண்ணூற்றாறு ஆடுகள் அல்லது நாற்பத்தெட்டுப் பசு அல்லது பதினாறு எருமைகள் வழங்கப்பட்டன
- ஒரு விளக்கிற்கு நாளாந்தம் ஒரு உழக்கு நெய் தேவைப்பட்டது
- கால்நடைகளைப் பெற்றுக் கொண்ட இடையர்கள் நாளாந்தம் ஒரு விளக்கிற்கு ஒரு உழக்கு நெய் வழங்க வேண்டி ஏற்பட்டது
- நெய், 'ஆடவல்லான்' என்ற அளவு கருவியால் அளக்கப்பட்டது.
- இடையர்கள் உறவுக் குடிகளுடன் இணைந்து குழுக்களாக இந்தப் பணியை மேற்கொண்டனர்
- இடையர்கள் நெய்யை கோவில் பண்டாரத்திடம் சூரிய சந்திரர் உள்ளவரை கையளிக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

மேற்குறித்த செய்திகளின் வழி இன்னோர் விடயமும் புலனாகிறது. இடையர்களிடம் கையளிக்கப்பட்ட கால்நடைகள் தொடர்ந்து பேணப்படும்போதுதான் கோவிலுக்கு அவர்களால் நெய்யை அளக்க முடியும். எனவே, பசுக்களைக் அவர்களிடம் கொடுக்கிறபோது

பசுக்கள், கன்றுகள், எருது என்ற மூன்று வகையாகவும் ஆடு, குட்டி, கிடாய் என்ற வகையிலும் எருமை, கன்று, கிடாய் என்றவகையிலும் கையளிக்கப்பட்டன. அதாவது, ஆண், பெண், குட்டிகள் என்ற வகையிலேயே இவை கையளிக்கப்பட்டன. இதனால் அவற்றினுடைய இனப்பெருக்கம், அவை பேணப்படுகின்ற காலம் என்பவை நீடித்து நிற்கும் என்ற நோக்கம் கருதியே இவை வழங்கப்பட்டன. ஆடுகள் இடையர்களிடம் கையளிக்கப்படுகின்ற போது அவை 'சாவாமூவாப் பேராடுகள்' என்ற அடைமொழியுடன் கையளிக்கப்பட்டதை அறிய முடிகிறது. அதாவது, தொண்ணூற்றாறு ஆடுகள் கையளிக்கப் படுகிறபோது அவை சாதலும் மூப்பும் அடையாமல் எந்தக் காலமும் முழு கணக்காக இருக்க வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டுக்காகவே இந்த அடைமொழியை மிகக் கவனமாகக் கையாண்டார்கள். ஆடுகள் அதிகம் பெருகலாம் அல்லது அவை குறைந்து போகலாம். ஆனால், தொண்ணூற்றாறு என்ற அளவும் அவற்றுக்காக இடையர்கள் வழங்குகின்ற ஒரு உழக்கு நெய்யும் மாறாக் கணக்காக இருக்க வேண்டும் என்கிற ஒரு நியதியின் அடிப்படையிலேயே சாவா மூவாப் பேராடு என்ற அடை இணைக்கப்பட்டதை அறியமுடிகிறது (மகேஸ்வரன்,வ. : ஓலை)

தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கல்வெட்டுக்கள் பல, கோவில்களுக்கு விளக்கெரிக்க நெய் வழங்கிய சோழ நாட்டு இடையர்கள் பற்றிய பல தகவல்களைத் தருகின்றன. அவர்கள் சோழ மண்டலம் என்று சொல்லப்படுகின்ற சோழ அரசின் மையப் பகுதியின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்துள்ளார்கள். குறிப்பாக தஞ்சாவூர், பாண்டிய குலாசனி வளநாடு, ராஜராஜ வளநாடு, நித்தவிநோத வளநாடு, ராஜேந்திரசிங்க வளநாடு, அருண்மொழித்தேவ வளநாடு, கேரளாந்தக வளநாடு, சத்திரிய சிகாமணி வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு ஆகிய வளநாட்டுப் பிரிவுகளில் பரவலாக வாழ்ந்துள்ளனர். அவர்கள் பல்வேறு விதமான தெருக்களிலும், வேளங்களிலும், அங்காடிகளிலும் மடவளாகங்களிலும், படைவீடுகளிலும், சதுர்வேதி மங்கலங்களிலும் பரவலாக வாழ்ந்தனர் என்ற செய்தியையும் அறிய முடிகிறது. அதாவது, அவர்கள் ஒதுங்கு குடிகளாக வாழாமல் மண்டலத்தின் பல்வேறு பிராந்தியங்களிலும் வாழ்ந்தனர் என்பது முக்கியமான செய்தியாகும்.

கால்நடைகள் அதனுடைய அளவுக்கு ஏற்ற வகையில் தனியொருவரிடம் கையளிக்கப்பட்டன. அவை அளவில் கூடுகின்ற போது இருவரிடமோ பலரிடமோ கையளிக்கப்பட்டன. "ஆடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறிலும் இவ்வூர் மன்றாடி தேவடி திருவியலூரும், கொற்றன் திறளனும் இவ்விருவோம் பாதிப் பாதி நெய்... அட்டுவம் ஆனோம்." (தெ.இ.க. தொகுதி XIX, இல.07)

கால்நடைகளின் எண்ணிக்கை கூடுகின்றபோது அவை பல இடையர்களிடம் கையளிக்கப்பட்டன. கும்பகோணம் திருக்கீழைக் கோட்டத்து பரமசுவாமி கோவிலில் மூன்று விளக்கெரிப்பதற்காக பல்வேறு இடையர்களிடம் தலைக்கு முப்பத்திரண்டு ஆடுகள் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. (தெ.இ.க. தொகுதி XIX, இல.132)

தஞ்சாவூர் கோவில் சார்ந்த இடையர்கள் கால்நடைகளை அதிகமாகப் பெற்றுக்கொண்டதனால் குழுக்களாக இணைந்தே அந்தச் சேவையைச் செய்தனர். இவர்களுள் தலைமை இடையனிடமே கால்நடைகள் கையளிக்கப்பட்டன. அவற்றைப் பொறுப்பேற்ற தலைமை இடையன் அவற்றைப் பராமரிக்க தன்னுடன் தனது உறவினர்களையே முதலில் இணைத்துக் கொண்டான். அதாவது, மகன், உடன் பிறந்தான், உடன் பிறந்தான் மகன், பேரப்பன், தன் பேரப்பன் மகன், நன்மச்சுனன், சிற்றப்பன், நன்மாமன், சிற்றப்பன் மகன், மருமகன் ஆகிய உறவினர்களையே அவன் முதலில் இணைத்துக் கொண்டான். இவர்கள் 'அடைகுடி' எனப்பட்டனர்.

உடன் பிறந்தான் : "நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு பெருங்கரை ஆனைசாத்தான் இவன் அடைகுடி உடன்பிறந்தானான செல்வன்"

உடன் பிறந்தான் மகன் : "தஞ்சாவூர் புறம்படி வீரசோழப் பெருந்தெருவில் இருக்கும் வடுகன் கணபதி, அடைகுடி, உடன்பிறந்த வடுகன் பிசங்கன், உடன்பிறந்தான் மகன் பிசங்கன் சூற்றி"

மகன் : தஞ்சாவூர் புறம்படி வில்லிகள் தெருவில் இருக்கும் மாயன் சூற்றி அடைகுடி, மகன் சூற்றி தூதுவன்"

சிற்றப்பன் : "ராஜராஜ வளநாட்டு ஒயில் கூற்றத்துப் பாச்சில் ஆலத்தூர் உழவன் அடைகுடி, சிற்றப்பன் உழவன் தொங்கன்"

மச்சுனன் (மைத்துனன்) : "தஞ்சாவூர் புறம்படி மடைப்பள்ளித்தெரு அரட்டன் திருவடி அடைகுடி, நன்மச்சுனன் அன்னகாமாடியன்"

மாமன் : "ராஜராஜ வளநாட்டு இளம்புலிவாய் சுற்றிய பெரும்புலிவாயில் நக்கன் அரையன் அடைகுடி, சிற்றப்பன் குருடன் கணபதி, பேரப்பன் மகனான அமரன் மூவரையான், நன்மாமன் அரையான் கடுவூர்"

சிற்றப்பன் மகன் : "பாண்டி குலாசனி வளநாட்டு மீப்பொழி நாட்டு கோயில் நல்லூர் தேவன் அரங்கன் அடைகுடி, சிற்றப்பன் மகன் சாத்தன் அமரன்

"மேற்குறித்தவர்களுடன் சேர்ந்து வேறு இடங்களைச் சேர்ந்த இடையர்களும் இந்தக் குழுமத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். உதாரணம் : "ராஜராஜ வளநாட்டு இளம்புலிவாய் சுற்றிய பெரும் புலிவாயில் திருவூறல் நக்கன் அடைகுடி, உடன்பிறந்தான் திருவூறல் கூற்றி இந்நாட்டு புலிவலக்கூற்றத்து திருப்பூவனத்திருக்கும் இடையன் கழனி சுவரன், பாண்டி குலாசனி வளநாட்டு புற்றிற்கூற்றத்து சாத்த மங்கலத்திருக்கும் இடையன் குறுந்தல் வெம்பல்"

இவ்வாறாக தலைமை இடையன் தன்னுடைய உறவுகளை முதல் நிலையில் இணைத்துக் கொண்டும் தேவை ஏற்படின் வேறு ஊர்களிலுள்ள இடையர்களை இணைத்துக் கொண்டும் கால்நடைகளை பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க நெய் வழங்கினான். இவ்வாறாக நூற்றைம்பத்தெட்டு இடையர் குடும்பங்கள் தஞ்சாவூர் கோவில் கல்வெட்டுக்களின்படி அடையாளப்படுத்தப்படுகிறார்கள். (தெ.இ.க. தொகுதி II பகுதி III, IV, V இல. 94)

மேற்குறித்த கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு இடையர்களின் சமூகப் பின்புலத்தையும் இவ்விடத்தில் நோக்குவது அவசியமானது. அவர்களுடைய ஆள் பெயர் அமைப்பு முறைமை யினூடாகப் புலப்படும் சமூகப் பின்புலம் மற்றும் அவர்களுடைய சமயச்

சார்பு, சாதியக் கட்டுமானத்தில் அவர்களுடைய நிலை ஆகியவற்றையும் இவற்றினூடாக நோக்கலாம். சமுதாயத்தில் பெயர் என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒரு மனிதனை மற்றொரு மனிதனிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவனது பெயராகும். ஒரு சமூகத்தின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கடவுட் கொள்கை, சமய சிந்தனை, சமுதாய மாற்றங்கள் அனைத்தையும் அச்சமுதாயத்தின் ஆட்பெயர் ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்தவகையில் தஞ்சாவூர் பெரிய கோவில் இடையர்கள் குறித்த கல்வெட்டு சுமார் 695 பெயர்களைத் தருகிறது. ஏனையவற்றில் உதிரிகளாக 53 பெயர்களை அறியமுடிகிறது. அவற்றின் அமைப்பு பின்வருமாறு :

- ஒரு பகுதிப் பெயர்கள் : துறையன் / சிங்கன்
- இருபகுதிப் பெயர்கள் : ஆனை சாத்தன் / நக்கன் பூதி
- முப்பகுதிப் பெயர்கள் : மன்றாடி தேவன் காரி / மன்றாடி கிழவன் சாத்தன்
- நாற்பகுதிப் பெயர்கள் : பெரும்புலியூர்க்குடி மன்றாடி ஐயாறன் வளவன்

என்று அமைகின்றன. இவற்றைவிட ஊர்களையும் வளநாடுகளையும் முன்னொட்டாகக் கொண்டு பெயர்கள் குறிப்பிடப் படுகின்றன. உதாரணம் : "தஞ்சாவூர் புறம்படி கந்தர்வத்தெரு இடையன் எழுவன் முள்ளூர்." இருபகுதிப் பெயர்களில் தந்தையினுடைய பெயர் முதலிலும் மகனுடைய பெயர் பின்னும் வருகிறது. மூன்று பகுதிப் பெயர்களில் சாதிப் பெயர் முதலில் இடம்பெறுகிறது. நாற்பகுதிப் பெயர்களில் ஊர் + சாதி + தந்தை + பெயர் + இயற்பெயர் என்ற வகையில் அமைந்துள்ளன.

சில கல்வெட்டுக்களில் சாதிப் பெயர், பட்டப் பெயர், இயற் பெயர், மாற்றுப் பெயர் என்ற வகையிலும் அமைந்துள்ளன. உதாரணம் : "இடையன் குறும்பூர் நாட்டுக் கோன்" என்றொருவன் குறிப்பிடப்படுகிறான்.

கோன் என்கிற பெயர் அதிகார நிலையில் குறுநிலத் தலைவனாக இருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. மன்றாடிகள், பெருமன்றாடிகள் என்ற பெயர்களிலும் 'பெரு' என்ற அடைமொழி அவர்களது சமூக மேலாண்மையைக் குறிப்பதாக இருக்கலாம். ஆகவே, இவர்கள் சாதாரணமான வாழ்வு முறையையும், குழும வாழ்வு முறைமையையும், சில இடங்களில் அதிகார முறைமையையும் கொண்டவர்களாக இயங்கி இருக்கிறார்கள் என்பதை அனுமானிக்க முடிகிறது.

அகில இந்திய அளவில் இடையர் சமூகத்தினுடைய சமய நிலையில் அவர்கள் வைணவர்களாக வைத்தெண்ணப்படுகிறார்கள். அதற்கு இந்தியப் பண்பாட்டுச் சூழலில் அவர்களுடைய காத்தற் கடவுளாகிய திருமால் மற்றும் வாசுதேவ கிருஸ்ணன் முதலான கடவுளரின் கதை மரபுகளின் ஊடாக அவர்கள் வைணவ சம்பிர தாயங்களில் ஊறிப் போனவர்கள் என்ற கருத்துநிலை காணப்படுகிறது. இன்றைய நிலையில் அதற்கான அரசியல் ஆதரவுகளும் அவர்களுக்குண்டு. எனினும், சோழ நாட்டுக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு ஆட் பெயர்களை ஆராய்கின்ற போது, அவர்கள் பெரும்பாலும் விஸ்ணு, சிவன் முதலான பெருந்தெய்வங்களுடைய பெயர்களை உடையவர்களாகவும் சிலர் தேவர்களின் பெயர்களைக் கொண்டவர்களாகவும், சிலர் கிராம தேவதைகளின் பெயர்களைக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவை தவிர தாவரங்கள், விலங்குகளின் பெயர்களைக் கொண்டவர் களாவும் காணப்படுகின்றனர். இந்தப் பெயர்களின் ஊடாக அவர்களிடம் சைவ, வைணவ மதங்கள், புராணக் கதைகள், கோவில்கள் ஆகியவை பெற்ற செல்வாக்கினை அறிய முடிகிறது. எனினும், விகிதாசார அடிப் படையில் நோக்குகின்ற போது பெரும்பாலான பெயர்கள் வைணவ சமயத்துடன் தொடர்புடையதாய் இருப்பதால் அவர்களின் சமயச் சார்பு ஓரளவு புலனாகிறது. இன்றுவரை அவர்கள் தம்மை வைணவர்களாக கட்டமைத்துக் கொள்வதும் மகாபாரதக் கதையில் வரும் வசுதேவ கிருஸ்ணனுடைய வம்சாவளியான யாதவர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிருபிப்பதும் தொடர்ந்து நடந்து வருகிறது. அகில இந்திய அளவில் ஆயர் சமூகம் முழுவதையும் யாதவர் (யாதவ்) என்ற

பொதுமைப் பண்பாட்டினடியாக ஒருங்கிணைக்கின்ற அரசியல் சூழல் உண்டு என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது அவசியமாகும்.

இடையர்கள் தமிழகத்துச் சாதியப் படித்தரத்தில் எவ்வாறான நிலையில் இருந்தனர் என்பதை நோக்குவதும் இவ்விடத்தில் அவசியமானது. அவர்கள் ஆரம்ப காலத்தில் எல்லாச் சமூகங்களையும் போலவே வாழிடம் அல்லது தொழில் முறைமை ஆகிய இரு அம்சங் களிகனாலேயே அடையாளப்படுத்தப்பட்டனர். பெரும்பாலும் நாடோடிச் சமூகங்களாக இருந்த இவர்கள், நிலையான மந்தை வளர்ப்புத் தொழிலை மேற்கொண்ட போது நிலைத்து வாழ்கின்ற சமூகங்களாக உருவாகினர். பின்னாட்களில் வருணப் பாகுபாடு உருவாகி வளர்ந்துவந்த போது சூத்திரர்களிடையே செய்த தொழில்களிலே உயர்வு தாழ்வு பாராட்டியதன் காரணமாக உயர்ந்த வகுப்பு - தாழ்ந்த வகுப்பு என்ற பாகுபாடு பிறந்தது. ஆகவே, தொழில் அடிப்படையில் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகள் சாதிய உயர்வு தாழ்வுகளாய் மாற்றமுற்றன. ஆயர், கோவலர் முதலான பெயர்களால் சங்க இலக்கியங்களில் அறியப்பட்ட சிலர், பின்னாட்களில் குறுநில மன்னர்களாக விளங்கிய போதும் சூத்திரக் குழுமங்களுள் ஒன்றாகவே இனங்காணப்பட்டனர். சோழர் காலத்திலும் அதன் பின்னரும் இவர்கள் இடைநிலைச் சாதியினராவே இனங்காணப்பட்டார்கள். (தெ.இ.க. தொகுதி XVII இல. 18, Karashima, N. : 1997: p.23.) பல சாதியினரையும் குறித்த இக்கல்வெட்டின் ஒழுங்கில் சிவப்பிராமணர்களுக்கு அடுத்த படியாகவும் உவச்சர்களுக்கு முன்பாகவும் இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். எனவே, இடையர்கள் சூத்திரருள் மேனிலையாக்கம் பெற்றவர்களாகவோ அல்லது தீண்டத் தகாதவர்களாவோ இருக்கவில்லை. இடைநிலைச் சாதியினராகவே நிலைத்தனர். இடையர்கள் இடைநிலைச் சாதியினராக மாற்றம் பெற்றதற்கு கண்ணன் என்கிற கடவுளின் ஊடான தொடர்பும் ஒரு காரணமாக அமைந்தது என்று மகரந்தன் குறிப்பிடுகின்றார் (பக்தவத்சலபாரதி (ப.ஆ) : 2003: ப.284). அதற்கான தோற்றத் தொன்மம் ஒன்றை றொபர்ட் டெலிஜ் கூற்றின் வழி கட்டமைக்கின்றார் :

“ஒரு காலத்தில் கோனார்களே எல்லோரையும் விட தாழ்ந்தவர்களாக இருந்தனர். பள்ளர்களைக் காட்டிலும் தாழ்வான நிலை.

சமூகத்தில் எவருமே இவர்களிடம் உணவு, நீர் பெறுவது கிடையாது. எவருடைய கவனத்திலும் இல்லாமல் தனிமைப்பட்டுக் கிடந்தனர். இம்மக்களின் பரிதாப நிலையை அறிந்த கிருஸ்ண பகவான் யாராவது ஒருவர் முன்வந்து இவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என எண்ணினார். அச்செயலை நானே செய்கிறேன் எனச் சொல்லி கோனார் வீட்டில் நுழைந்து தயிரும் வெண்ணெயும் சாப்பிட்டார். இதனைப் பிராமணர்கள் உள்ளிட்ட அனைத்துச் சாதி மக்களும் பார்த்தனர். அன்றிலிருந்து எல்லோரும் கோனார்களிடம் நெருங்கிப் பழகினார்கள். இவர்களிடம் நீர், மோர், தயிர் வாங்கிப் பருகத் தொடங்கினார்கள் (Deliege, Robert (1993) The Myths of Origin of the Indian Untouchavles, Man (N.S.) 28, 533 – 549.)

இதற்கும் மேலாக மன்றாடி கிழவன் ((தெ.இ.க.தொ XIX இல. 215), மன்றாடி அமரகோன் (தெ.இ.க.தொ XIX இல.276), நாட்டுவிடங்கப் பெரு மன்றாடி (தெ.இ.க.தொXIII இல.122) ஆகிய தனிப்பட்ட உடைமை யாளர்களையும் சமூக அந்தஸ்து உடையவர்களையும் அறியமுடிகிறது. இவர்களில் சிலர் பொருளாதார உடைமையாளராகவும் விளங்கி கோவிலுக்குத் தானங்களை வழங்கியுமுள்ளனர். (தெ.இ.க. தொகுதி XVII இல.512,527, (தெ.இ.க. தொகுதி XIX இல.205, 203, 206, (தெ.இ.க. தொகுதி VI இல.26, தெ.இ.க. தொகுதி XXII இல.206)

எனினும், விக்கிரம சோழன் காலத்துச் சாசனம் ஒன்று அவர்களுக்கு விதிக்கப்பட்ட சலுகைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவர்கள் வீட்டு வாசலில் படிகள் சாந்து பூசிக்கொள்ளுதல், நன்மைக்கு தண்டோராப் போடுதல், தீமைக்கு பாடை கட்டிக் கொள்ளுதல், அப்பாடையில் பச்சைப் பட்டு, புலியூர்ப்பட்டு ஆகியவை சாத்துதல், நன்மை தீமைகளுக்கு உவச்சுக் கொட்டுதல் ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டதான செய்திகளை அறியமுடிகின்றது. இது விக்கிரமசோழன் காலத்தில் அவனுடைய பதின்மூன்றாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. கீரனூரான கெழுமங் கொண்ட சோழ நல்லூர் இடையர்களுக்கு கோநேரின்மை கொண்டான் தன்பெயரால் கொடுத்த தர்மமாக இது பேசப்படுகிறது. (தெ.இ.க.தொ V, இல.283) இந்தக்கல்வெட்டின் வழி பார்க்கின்றபோது, அவர்களுடைய இரட்டை நிலையை அறிய முடிகிறது.

விக்கிரம சோழன் காலத்துக்கு முன்பு மேற்குறித்த சலுகைகள் மறுக்கப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். விக்கிரமசோழன் காலத்துக்குப் பின்புதான் அவர்கள் இச்சலுகைகளை அனுபவிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். எனவே, இவர்கள் இக்காலத்தில் சமூக மேனிலை யாக்கம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

ஒரு நாட்டின், இனத்தின், பண்பாட்டின் வரலாறு என்பது ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக இருக்க முடியாது. அல்லது அது அதிகாரங்களால் கட்டமைத்துத் திணிக்கப்பட்டதாகவும் இருக்க முடியாது. அது பல்பரிமாணங் கொண்டதாகவும் மக்களையும் பண் பாட்டையும் இணைத்துச் செல்வதாகவும் இருக்க வேண்டும். மேற்குறித்த தகவல்கள் இவ்வாறான கோட்பாட்டின் வழியே கட்டமைக்கப்படக்கூடியன.

இடையர் சமூகம் என்பது இனத்துவ, அல்லது சமூக பண்பாட்டின் படிமலர்ச்சியின் காலந்தோறும் சமூக அசைவியக்கத்துடன் இணைந்து வந்துள்ளது. கால்நடைப் பொருளாதாரத்தின் அச் சாணியாகவும், உபஉணவுப் பண்டங்களின் விநியோகத்தவர் களாகவும், சடங்காசாரங்களின் பங்காளியாகவும் அச்சமூகம் இயங்கி வந்துள்ளது. இச் சமூகத்திற்கான வாழ்வியற் கோலங்களும், பொருளியல் நடவடிக்கைகளும், தொழில் முறைகளும் தனித்துவ அடையாள முடையன. அவற்றை சமூக மானிடவியலாளர்கள் விபரித்துள்ளனர். எனினும், சமயம் சார்ந்த நிறுவனங்களில் அவர்கள் கொண்ட ஊடாட்டங்கள் இடையறாது நிகழ்ந்து வந்துள்ளன. பக்தி அடிப்படையில் வைணவக் கோயில்களுடன் குறிப்பாகத் தமிழகத்தில் திருவரங்கம், அழகர் கோயில் ஆகிய கோயில்களுடன் அவர்களுடைய தொடர்பைக் களப்பணி மூலம் பல ஆய்வாளர்கள் விபரித்துள்ளனர். ஆயின், இத்தொடர்புகள் சமயச் சார்புடன் பக்திமயப்பட்டனவாகவே அடையாளப்படுத்தப்பட்டன. அவர்கள் கோயிற் சேவையாளர்களாக இயங்கினர் என்பது பெரும்பாலும் பேசாப் பொருளாகவே இருந்தது. கோயில் நிறுவனம் பற்றி ஆராய்ந்த பலரும் (தொ. பரமசிவம் நீங்கலாக) ‘கோயிலில் விளக்கு எரிக்க வழங்கப்பட்ட கால்நடைகள் இடையர் களிடம் கையளிக்கப்பட்டன’ என்ற ஒற்றை வாசகத்துடன் அதனை முடித்துக்கொண்டனர். அதனால் கோயிலுடன் தொடர்புபட்ட இடையர் குழுமம் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் தமிழ்ச் சூழலில் பெருமளவில் இடம் பெறவில்லை. ஆயின், தமிழகத்துக் கோயில் கல் வெட்டுக்களில் நம்பகமான ஆதாரங்களின் வழி நுனித்து ஆராயும் போது அவர்கள்

வாழ்வும், வரலாறும் மேலும் துலக்கம் பெறக்கூடும் என்ற நோக்கின் வழிப்பட்டதாகவே இப்பேருரை கட்டமைக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட தகவல்களின் வழியாக நோக்குகின்ற போது, இடையர்கள் கோயிலில் விளக்கெரித்தல் என்ற பிரதான செயற்பாட்டின் அச்சாணிகளாக விளங்கியமை புலனாகிறது. கோயில் விளக்கு (அக்னி) முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அது வேள்வித் தீயின் வழிவந்த சுவடு. கோயில்கள் 'பெருங்கோயில்கள்' என்ற கட்டுமானத்துள் வருவதற்கு முன்பே வழிபாட்டிடங்களில் அந்திக் காலங்களில் 'செந்தீ விளக்கங்கள் ஏற்றப்பட்டதைச் சங்கச் செய்யுள் வழி அறியலாம். காலை, மாலை விளக்கேற்றல் என்பதுடன் நொந்தா விளக்கு அல்லது நந்தா விளக்கு என்பது வழிபாட்டிடங்களில் முக்கியம் பெறத் தொடங்கியது. நந்தா அல்லது நொந்தா என்பதன் பொருள் 'அணையாத' என்பதாகும். அதாவது, இடையறாது தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கும் விளக்கு நந்தா விளக்கு எனப்பட்டது. வேத வேள்விக் காலத்தில் பின்பற்றப்பட்ட 'எரிஓம்பல்' என்ற செயற்பாட்டின் தொடர்வினையாற்றலாக இதனைக் குறிப்பிட முடியும். ஆகவே, கோயில் கட்டுமானங்கள் பெருத்து, மூலவரும், எழுந்தருளியும், பரிவார மூர்த்திகளுமாக வழிபடு தெய்வங்கள் அதிகரித்த போது, அத்திருவுருவங்கள் முன் விளக்கு எரியும் பண்பாடும் கூட வளர்ந்தது. இந்த விளக்குகள் எரிப்பதற்கு இலுப் பெண்ணெய் (இலுப்பைப்பால்) பாவிக்கப்பட்டது. எனினும் நெய் கொண்டு விளக்கெரிக்கும் ஆகமப் பண்பாடு கோயிலினுள் கொண்டுவரப்பட்டபோது, நெய்யின் முக்கியத்துவம் உணரப்பட்டது. கோயில் சுரபிகளில் உள்ள பசுக்களின் பாலில் இருந்து பெறப்படும் நெய் விளக்கெரிக்கத் தேவையான நெய்யின் கேள்விக்கு ஏற்ற நிரம்பலாக அமையவில்லை. இதற்கான மாற்றுச் சிந்தனை அல்லது மாற்று வழியாக இடையர் சேவையைப் பெறுவது என்பது உணரப்பட்டிருக்க வேண்டும்.

இடையர் வசம் எருமைகள், பசுக்கள் என்பன கையளிப்பதில் காணப்படும் இடர்பாடுகள் உணரப்பட்ட வேளையில் ஆடுகள் தானப் பொருளாக மாறுகின்றன. இடையர்கள் ஆடுகளைப் பொறுப்பேற்று, அவற்றினை வளர்த்து, பராமரித்துத் தமது பொருளியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அதேவேளையில் பசு, எருமைகளில் இருந்து பாலைப் பெற்று அதனைப் பதப்படுத்தி நெய்யாகக் கையளிக்கவேண்டியவர்களாயினர். இந்த நெய் கையளிப்பு என்பது

மிகவும் கடினமான நியதிகளின் படியே நிகழ்ந்துள்ளது. ‘சாவாமூவாப் பேராடு’ என்ற அடைமொழியின் உள்நோக்கத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளும் போதுதான் அந்தக் கட்டுப்பாடுகளின் கடினத் தன்மை தெரியவரும். ஆயின், இடையர்கள் கால்நடைகளைப் பெற்றுக்கொண்டு பண்டாரத்தில் நெய் அளக்கும் கடமையை மிகவும் சிரத்தையுடன் மேற்கொண்டனர். அவர்கள் அதைச் செய்யாது மறுத்ததாகவோ எதிர்வினையாற்றியதாகவோ தண்டனைகள் வழங்கப்பட்டதாகவோ சான்றுகள் இல்லை. கோயிலினுள் இருக்கும் பணியாளர்கள் தத்தமக்கு விதிக்கப்பட்ட பணிகளை மாத்திரம் புரிய, இவர்கள் மந்தை மேய்ப்பு, பால், பாற்பொருள் உற்பத்தி, கால்நடைப் பராமரிப்பு என்ற பல தொழில்களையும் நிகழ்த்திக் கொண்டு விளக்கெரிக்க மூலப்பொருளான நெய்யை இடையறாது வழங்கும் சேவையைப் புரிந்தனர். அதனால் அவர்கள் கோயில் கட்டுமானத்துள் நுழையாத புறநிலைப் பணியாளராயினர்.

அதுமட்டுமல்லாது அவர்களைக் குறித்தான செய்திகள் கல்வெட்டுக்களில் பரந்து காணப்பட்டதால் அவர்களுடைய சமூக வரலாறும் துலக்கம் பெற்றது. அவர்களது வாழிடங்கள், அவர்களது அடைகுடிகளான குடும்ப உறவுகள், பெரும்பாலும் அவர்கள் நெருங்கிய உறவினர்களுடன் இணைந்து குழுக்களாக வாழ்ந்த, இயங்கிய செய்திகள், அவர்களது பெயர்கள் வழியான பண்பாட்டுக் கோலங்கள், அவர்கள் பின்பற்றியிருக்கக் கூடிய சமயங்கள், தமிழக சாதிக் கட்டுமானத்தில் அவர்களுக்கான இடம் அவர்களது சமூக மேனிலையாக்கம் முதலான செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. பல்வேறு சமூகங்களின் வரலாறுகளையும் உள்ளடக்கியதுதான் கோயிற் பண்பாடு என்ற உண்மையையும் இதனூடாகத் துலக்கம் பெற்றதையும் அவதானிக்கலாம்.

‘மௌனங்கள் கட்டுடைக்கப்படும் போது புதுப்புது அர்த்தங்கள் கொள்ளும்.’

நன்றி

## உசாத்துணை நூல்கள்

சசி, எஸ்.எஸ். (1990), இந்தியாவில் ஆயர் சமுதாயம், தென்னிந்திய கற்கைகள் நிறுவகம், சென்னை.

சுப்பிரமணியன், கா. (1993), சங்ககாலச் சமுதாயம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

தர்ஸ்டன் எட்கார் (மொ.பெ) (1987), தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பக்தவத்சலபாரதி (ப.ஆ) (2003), தமிழகத்தில் நாடோடிகள், வல்லினம், புதுச்சேரி.

பரமசிவன், தொ. (1989), அழகர் கோயில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

பாலசுப்ரமணியம், மா. (1979), சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு பாகம் II, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை.

பிள்ளை கே.கே. (2002), தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பூங்குன்றன், இரா. (2001), தொல்குடி - வேளிர் - அரசியல், புதுமலர் பதிப்பகம், கோவை.

மகேஸ்வரன், வ. (2008), சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

மாதையன், பெ. (2001), வரலாற்று நோக்கில் பழமரபுக் கதைகளும் தொன்மங்களும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் (South Indian Inscription Volumes)

Burton Stein (1994) Peasant state and society in medieval South India, Oxford University press, Newyork.

Minakshi, C (1977) Administration and Social life under the pallavas, university of Medras, Medras.

Nilakantasastri K.A. (1937) The Colas, university of Medras, Medras.

வானமாமலை, நா. (1974) "தஞ்சைக் கோயிலின் செலவும் நில வருவாயும்" ஆராய்ச்சி, மலர் 04, இதழ் 03.

நடன காசிநாதன் (ப.ஆ) (1988) "சோழர் காலத்தில் விளக்குத் தானம்" அருண்மொழி - ஆய்வுத் தொகுதி, தமிழ்நாடு அரச தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

ரோஸ்லின் ரொபெக்காள் (2000) "முற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களில் ஆள் பெயர் ஆய்வு", ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

மகேஸ்வரன், வ. (2008) "சாவா மூவாப் பேராடு", ஓலை, தமிழ்ச் சங்கம், கொழும்பு.

Vairavel, N (1989) "History of the Pastoral Communities in Ancient and Medieval Tamilnadu", Thesis Submitted for the Degree of Doctor of philosophy, Madurai Kamarajar University.

Karashima, N. (1997) "The Untouchables in tamil inscription and other historical sources in tamilnadu", Cast system antouchavility and the depressed, (Ed.) H. Kotani, Manohar, New Delhi.

Subbarayalu, Y. (1976) "The State in Medieval South India (600 - 1350)", Phd. Thesis, Madurai Kamarajar University, Madurai.

................ (2002) "State and Society During the cola period", State and society in pre- Modern South India, (ed.) R.Champakalakshmi and others, Cosmo books, Thrisur.

Suresh, B Pillai (1996) "The Raajaraasvaram at Tancavuur", The Proceedings of the first international conference Seminar on tamil studies Kollampur, Malesiya.



யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சைவத்திற்கும், தமிழிற்கும் பேர் போன இணுவில் கிராமத்திலே 1955 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 24ஆம் திகதி பிறந்த பேராசிரியர் வ.மகேஸ்வரன்; இணுவில் சைவ மகாஜனா மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றில் முறையே தனது இடைநிலை மற்றும் உயர்கல்வியினை நிறைவு செய்து, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி; தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1982ஆம் ஆண்டு பட்டதாரியானார். அதே பல்கலைக்கழகத்தில் 1991 இல் விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர், 24 ஆண்டுகளாகப் பல்கலைக்கழக ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் பேராசிரியர், மற்றும் துறைத் தலைவராகக் கடமையாற்றும் இவர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புகழ்பூத்த தொல்லியலாளர்கள் மற்றும் கல்வெட்டியல் அறிஞர்களான வை.சுப்பராயலு, க.இராசன் என்பவர்களின் கீழ் தனது கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்த பெருமைக்குரியவர். இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் காரைக்குடி அழகப்பர் பல்கலைக்கழகத்தில் "கோவிற்கலையில்" பெரும் பட்டயச் சான்றிதழையும் நிறைவு செய்தார்.

கோவிலும் சமூகமும், சோழர் காலத்தில் வைணவம், தவில் மேதை தட்சணாமூர்த்தி, உருத்திரகணிகையர் கதாசாரத் திரட்டு (பதிப்பு) முதலான நூல்களினதும், நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளினதும் ஆசிரியராக விளங்கும் இவர், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் முதலான நாடுகளிலே நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடுகளில் பங்கு கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த பெருமைக்குரியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் மைசூரில் உள்ள தென்னிந்திய மொழிகள் நிறுவனம், பாண்டிச்சேரி மொழி மற்றும் கலாசார நிறுவனம் மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் முதலானவை பேராசிரியரை அதிதிப் பேச்சாளராக அழைத்துக் கௌரவப்படுத்தியுள்ளன. பேராசிரியர்கள் வை.சுப்பராயலு, சி.பத்மநாதன், க.அருணாசலம், சி.தில்லைநாதன், வை.நந்தகுமார் முதலானோர்களுடைய மணிவிழா வெளியீட்டின் தொகுப்பாசிரியர்களில் ஒருவராக கடமையாற்றிய பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீட ஆய்வுச் சஞ்சிகையான 'பல்கலையின்' ஆசிரியராகவும் கடமையாற்றி வருகிறார்.

தமிழர் பண்பாடு, சாசனம், இலக்கிய வரலாறு முதலான புலங்களிலே தனது புலமைச் சிரத்தையினைச் செலுத்தி வரும் பேராசிரியர், குறிப்பாக சாசனங்கள் வழி தமிழர் பண்பாட்டை இனங்கண்டு சுட்டுவதில் தனியான கவனம் பெறுகிறார். இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களின் ஆலோசகராகவும், வளவாளராகவும் இவர் திகழ்ந்து வருகிறார்.